# ஐந்து தமிழ் தீவிரவாத இயக்கத் தலைவர்களும் பங்குபற்றுகின்றனர்!

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 5-7-1985 வெள்ளிக்கிழமை (ஆனி 21 ஷவ்வால் 16) முழக்கம் 150

பூட்டான் மகாநாட்டில் ஐந்து தமிழ் தீவிரவாத இயக்கங்களும் கலந்து கொள்ளும் என்று புதுடில்லியிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. புளொட், தமிழீழ விடுதலைப் புலிகள், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ ஆகிய அமைப்புக்களின் தலைவர்களும், அவர்களுடன் அதே குழுவின் மற்றொரு பிரதிநிதியுமாக மொத்தம் பத்துப் பேர் இதில் பங்குபற்றுவார்கள் என தெரிவிக்கப்பட்டது,

★ அமிர், சிவா, சம்பந்தனுக்கு பூரண அங்கீகாரம்:

# டில்லியில் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே பூட்டான் செல்வதுபற்றி கூட்டணி தீர்மானிக்கும்

(சென்னை)

இலங்கை இனப் பிரச்சினை பற்றிய பூட்டான் மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி கலந்து கொள்வதற்கு முன்னர், இந்திய அரசுடன் பேச்சுக்கள் நடாத்திய பின்பே இதைப் பற்றி முடிவு செய்யப்படும் என நேற்று சென்னையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்திய அரசின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்கள் நடாத்த புதுடில்லி செல்லவும், பூட்டான் பேச்சுவார்த்தைகள் பற்றி முடிவு எடுப்பதற்கும் கூட்டணித் தலைவர் திரு எம். சிவசிதம்பரம், செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், முன்னாள் திருமலை எம்.பி. திரு ஆர். சம்பந்தன் ஆகியோருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நேற்றைய கூட்டத்தின் பின்பு சென்னையில் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில், பூட்டான் பேச்சுவார்த்தைகளில் தீவிரவாத இளைஞர்கள் கலந்து கொள்வதை தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்றுக் கொள்வதாகவும், தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித்

—4 ஆம் பக்கம் பார்க்க

# பூட்டான் மாநாட்டில் தமிழில் பேசுவதற்கும் அரசு இணக்கம்!

## பாராளுமன்ற தமிழ் மொழிபெயர்ப்பாளர் இலங்கைக் குழுவில் சேர்க்கப்பட்டுள்ளார்

எதிர்வரும் திங்கட்கிழமை பூட்டானில் ஆரம்பமாகும் இரண்டு நாள் இனப்பிரச்சினை மகாநாட்டில் பங்குபற்றுபவர்கள் விரும்பினால் தமிழில் பேசுவதற்கும், ஆங்கில உரைகளின் தமிழ் மொழிபெயர்ப்பை வழங்குவதற்கும் இலங்கை அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. தமிழர் பிரதிநிதிகள் சார்பில் இந்தக் கோரிக்கை விடப்பட்டதையடுத்தே அரசு இணக்கம் தெரிவித்தது,

இதன் பொருட்டு, பாராளுமன்ற தமிழ்-ஆங்கில சமகால மொழி பெயர்ப்பாளர் ஒருவரையும் கடைசி நேரத்தில் தூதுக்குழுவில் சேர்த்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

பாராளுமன்றமொழிபெயர்ப்பாளரான இளவெட்டியைச் சேர்ந்த திரு குமாரசாமி இன்றிரவு பூட்டான் புறப்படும் குழுவில் இடம்பெற்றிருப்பதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கூட்டணிப் பிரமுகர்கள் மட்டுமன்றி, தமிழீழ விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகளும் தமிழில் உரையாற்றக் கூடுமென்று புதுடில்லி வெளிவிவகார அமைச்சு வட்டாரங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்

—4-ம் பக்கம் பார்க்க

## 12 பேர் குழு இன்றிரவு பூட்டான் பயணம்; 'பாஸ்கர்' செல்லவில்லை!

பூட்டான் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதியின் இளைய சகோதரர் எச். டபிள்யூ ஜெயவர்த்தனா கியூ. ஸி தலைமையிலான பன்னிரண்டு பேர் அடங்கும் இலங்கைக் குழு இன்றிரவு பூட்டான் பயணமாகின்றது.

பம்பாய், கல்கத்தா ஊடாக நாளை முற்பகல் இவர்கள் பூட்டானைச் சென்றடைவர்.

மாநாடு எட்டாம், ஒன்பதாம் திகதிளில் நடைபெறும்.

சட்டத்தரணிகள் எச் எல். டி. சில்வா பி ஸி., எல். சி. செனிவரத்தின பி ஸி.,

—4 ஆம் பக்கம் பார்க்க

## அவுஸ்திரேலிய வேலை வாய்ப்புப் பற்றி தூதுவர் தரும் விளக்கம்

அவுஸ்திரேலிய தூதரகத்தில் வழங்கப்படும் பத்திரங்கள் விசா அல்லது வேலை வாய்ப்பு பெறுவதற்கான பத்திரங்கள் அல்லஎன்று கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய தூதுவர் திரு. ஹெர்டன் நேற்றுத் தெரிவித்தார்.

எண்பதாயிரம் பேருக்கும் அதிகமானோருக்கு வேலை வழங்க அவுஸ்திரேலிய அரசு தீர்மானித்திருப்பதாகவும், தற்போது சில தகைமைகளைப்பூர்த்தி செய்யும் படிவங்கள் வழங்கப்படுவதால் அவற்றை பூர்த்தி செய்ததும் சம்பந்தப்பட்டவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும் என்றும் அதைத் தொடர்ந்தே வேலை வாய்ப்புப் பற்றி தீர்மானிக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

கடந்த நிதியாண்டில் இலங்கையிலிருந்து 1,352 பேருக்கு விசா வழங்கப்பட்டதாகத்

—4 ஆம் பக்கம் பார்க்க

### மாணவப்பாய் வாலிபருக்கு இத்தாலி தண்டனை

இத்தாலியில் போதைவஸ்து கடத்திய குற்றச்சாட்டின்

—4ம் பக்கம் பார்க்க

## பேச்சினை எதிர்த்து திங்கள் ஹர்த்தால்

இனப் பிரச்சினை சம்பந்தமாகப் பூட்டானில் நடைபெறும் பேச்சுவார்த்தைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அன்றைய தினமான எட்டாம் திகதி திங்கட்கிழமை வடக்கு கிழக்குப் பகுதிகளில் பகிஷ்கரிப்பில் ஈடுபடும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாகப் பூட்டான் மாநாடா, பூச்சாண்டி விளையாட்டா என்ற தலைப்பிலான துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் எதிர்வரும் திங்கள் அன்று கடையடைப்புடன்,

— 4ம் பக்கம் பார்க்க

### இளைஞர் கொலை

மூதூரில் நேற்று முன்தினம் பொலிஸ் கோஷ்டிமீது சீருடையணிந்த தீவிரவாதிகள் தாக்குதல் நடாத்த முயன்றபோது பொலிசாரும் பதில் தாக்குதல் நடாத்தியதில் ஒரு மார்க்ஸிஸ தமிழ் தீவிரவாதி கொல்லப்பட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

## இடைக்காடு முதல் நீர்வேலி வரை வயோதிபரும் பங்கு பற்றிய ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(அச்சுவேலி)

வாகனங்கள், ட்ராக்டர்கள், துவிச்சக்கர வண்டிகள் சகிதம் பல நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்ட ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று அச்சுவேலி புத்தூர் பகுதியில் நேற்று நடத்தப்பட்டது.

காலை எட்டு மணியளவில் இடைக்காட்டிலிருந்து ஆரம்பமான இவ்வூர்வலம், பத்தைமேனி, அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், பிரதான வீதியூடாக நீர்வேலிச் சந்தியை நண்பகல் 12-30 மணியளவில்

— 4 ஆம் பக்கம் பார்க்க

'லங்கா புவத்'தின் மற்றொரு செய்தி:

## தமிழ் தலைவருக்கும் இந்திய அரசு கடும் எச்சரிக்கை!

தீவிரவாதக் குழுவினர் இந்தியாவில் இருந்து கொண்டு வன்செயல்களில் ஈடுபட்டு வருவதை தடுக்க இந்தியா தயங்கமாட்டாது என 'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகை தெரிவிப்பதாக லங்கா புவத்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வைரவர் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நவாலி குளத்தடி ஸ்ரீஞான வைரவர் கோவில் அலங்கார உற்சவம் கடந்த மாதம் இருபத்து ஏழாம் திகதி ஆரம்பமானது. இம் மாதம் ஆரும் திகதி நிறைவு பெறும்.

## விவசாயிகள் மகஜர்

(யாழ்ப்பாணம்)

மருதனுமடம், இணுவில் கிழக்கைச் சேர்ந்த ''கனகம் ஒழுங்கை'' விவசாயிகள், அங்குள்ள பெருவாரியான காய்கறித் தோட்டங்களுக்கு நீர் இறைப்பதற்கு. இதுவரை காலமும் மண்ணெண்ணெயில் இயங்கும் இயந்திரத்தையே பயன்படுத்தி வந்தனர்.

இந்த எண்ணெய் பெறுதலில் தற்போது சில காலமாக நிலவிவரும் சிரமங்களை முன்னிட்டு, பதிலீடாக, மின்னியக்க இயந்திரங்களில் ஆர்வம் காட்ட அவர்கள் முற்பட்டுள்ளனர். அத்துடன் நிற்காது உடுவில் உப- பணிமனையிலிருந்து மின்வழங்கல் கோரி, கூட்டாக அநேக கையொப்பங்கள் கொண்ட மகஜர் ஒன்றையும் யாழ். அபிவிருத்திச் சபைக்கு அவர்கள் அனுப்பி வைத்துள்ளனர்.

## ஆசிரியர் இல்லாது இயங்கும் வேலணைப் பாடசாலை ஒன்று

(மண்கும்பான்)

வேலணை கல்வி வட்டாரத்தில் உள்ள பாடசாலையில் 6ம் வகுப்புவரை இருக்கின்றபோதிலும் ஆசிரியர் ஒருவரும் அங்கு கடமையில் இல்லை.

அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட இரு ஆசிரியர்களில் ஒருவர் ஆங்கில ஆசிரியராகவும், மற்றவர் பதில் அதிபருமாக இருந்து வந்தனர். தற்பொழுது ஆங்கில ஆசிரியர் மூன்று நாட்களுக்கு இப்பாடசாலையிலும் மற்ற இரு நாட்களிலும் அயலில் உள்ள வேறு ஒரு பாடசாலையிலும் கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளார்.

பதில் அதிபராக நியமிக்கப்பட்டவர் விடுமுறைக்குப் பின் பாடசாலை தொடங்கியதில் இருந்து இன்னமும் பாடசாலைக்கு சமுகம் கொடுக்கவில்லையாம். இதனை அவதானித்த பாடசாலை அபிவிருத்திச்சபை பாடசாலை மாணவ மாணவிகளின் கல்வி பாதித்து விடுமே என உணர்ந்து வசதிக் கட்டண ஆசிரியர் ஒருவரை நியமித்து இந்த அரசாங்க பாடசாலையை நடாத்தி வருகின்ற நிலையை இங்கு காணக்கூடியதாக இருக்கின்றது.

## புகையிரத சமிக்ஞை, தந்திக்கம்பி வேலைகள் மிகத் துரிதமாக நடைபெற்று வருகின்றது

(மிருசுவில்)

வடபகுதியில் திருடப்பட்ட தந்தி, ரயில்சமிக்ஞை கம்பிகளுக்குப்பதிலாக புதியகம்பிகளை இணைக்கும் வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

இதற்கென புகையிரதப் பகுதி தொலைத்தொடர்பு ஊழியர்குழு ஒன்றை இங்கு அனுப்பி வைத்துள்ளது: சேதமாக்கப்பட்ட தந்திக்கம்பிகளுக்குப் பதிலாக பொருத்துவதற்கு புதிய கம்பங்கள் ஏற்கனவே இங்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

புத்தளம் - கொழும்பு ரயில் பாதையிலுள்ள சமிக்ஞைகள் எலக்ரோணிக் மயமாக்கப்பட்டதை அடுத்து அங்கிருந்து கழற்றி எடுக்கப்பட்ட தந்திக் கம்பிகள் இங்கு பொருத்தப்பட இருக்கின்றன.

முறிகண்டி- கிளிநொச்சி, பளை - கொடிகாமம் ஆகிய இடங்களுக்கிடையிலேயே அதிகமான கம்பிகள் திருடப்பட்டுள்ளன. திருத்த வேலைகள் அடுத்த ஒரு வாரத்தினுள் முடிவடையுமென்றும் அதன் பின்னர் மதவாச்சி - தலைமன்னார் பாதையில் தொலைத் தொடர்பு, சமிக்ஞை திருத்த வேலைகள் ஆரம்பமாகுமென்றும் சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து அறியப்படுகின்றது.

## சேவாச்சிரம உதவிகள்

(புலோலி)

வல்வெட்டித்துறையில் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமான யேசுதாஸ் மாசிலாமணியின் குடும்பத்திற்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினால் உணவுப் பொருட்களும், பணமும் வழங்கப்பட்டது.

சேவாச்சிரமத் தலைவர் ஸ்ரீ சுவாமி சித்ரூபானந்தா இவ்வுணவுப் பொருட்களையும் பணத்தையும் அமரர் மாசிலாமணியின் குடும்பத்திடம் கையளித்தார்.

இதேவேளை ஏழைகள் நோயாளிகளின் நன்மை கருதி ஆச்சிரமத்தில் இலவச மருத்துவச் சேவையும் நடைபெற்றது. பருத்தித்துறை லயன்ஸ் கழகத் தலைவர், டாக்டர். எம். கே. முருகானந்தன் இந்த இலவச மருத்துவ சேவைகளை வழங்கினார்.

## உடுப்பிட்டிக்கு பேராயர் விஜயம்

(நல்லூர்)

உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள இலகடிக் குடியேற்றப் பகுதிக்கு உடுப்பிட்டித் தேவாலய சேகரக்குரு அருட்திரு. எஸ். மனோபவன் அடிகளாரின் வேண்டுகோளுக்கு அமைய விஜயம் செய்த தென்னிந்திய திருச்சபையின் யாழ். அத்தியட்சாதீனப் பேராயர் பேரருட்திரு. டி. யே, அம்பலவாணர் ஆண்டகை அப்பகுதியில் குடியேறியிருக்கும் மக்களின் தேவைகள் குறித்து அவர்களுடன் கலந்து பேசினார்.

அப்பகுதி மக்களுக்கு மிகவும் அவசிய தேவையாக இருக்கும் குடிநீர் பிரச்சினைக்கு உடன் தீர்வுகாண ரூபா முப்பத்தெட்டு ஆயிரம் செலவில் ஒரு கிணற்றை வெட்டிக் கட்டிக் கொடுக்க ஆவன செய்வதாக அவர் வாக்களித்தார்.

இலகடி கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இவ்வேலையை சேகரக்குரு அருட்திரு. எஸ். மனோபவன் அடிகளார் முதல் மண்ணை வெட்டி ஆரம்பித்து வைத்தார்.



✱ அரியாலை மளர்மகள் வீதி சிதம்பரநாதன் தேவசேனு தம்பதிகளின் மகள் ரஜனி இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ கிளிநொச்சி திருவையாறு மகாலிங்கம் கிருஷ்ணவேணி தம்பதிகளின் மகள் மிருணாழினி இன்று தனது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ மானிப்பாய் நாகேந்திரம் தம்பதிகளின் மகள் சங்கீதா இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ ''லதா வாசம்'' இணுவில் கிழக்கு பர்வதநாதன் கமலாவதி தம்பதிகளின் புதல்வன் பிரசாந் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று கொண்டாடுகிறார்.

✱ திருநெல்வேலி சுந்தரலிங்கம் விஜயராணி தம்பதிகளின் மகள் சுகன்யா இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ சுன்னாகம் வியரட்னம் சத்தியபாமா தம்பதிகளின் மகன் பிரஷாந்தன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ சுன்னாகம் பஞ்சாட்சரம் ஜானகி தம்பதிகளின் மகள் அம்பிகா இன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ யாழ். வெள்ளாந்தெரு சிவஞானசுந்தரம் சுசீலாதேவி தம்பதிகளின் மகள் ஷர்மிலி (சசி) இன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ புத்தூர் மேற்கு மந்திரிமனையைச் சேர்ந்த அன்புராஜா ஞானரஞ்சிதம் தம்பதிகளின் புத்திரன் பாமரேமன் (ரேமன்) தனது முதலாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிறார்.

## நற்கருணை ஆராதனை

(நல்லூர்)

மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த மிஷனரிமார் இலங்கையில் மெதடிஸ்த திருச்சபையை ஸ்தாபித்த தினமாகிய ஜூன் 29ந் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் பரிசுத்த பேதுருவானவர் ஆலயத்தில் திருநற்கருணை ஆராதனை ஒப்புக் கொடுக்கப்பட்டு அருளுரை நிகழ்த்தப்படும்.

இதற்கான ஏற்பாடுகளை மெதடிஸ்த திருச்சபையின் வட பிராந்தியத் தலைவர் அருட் திரு. எச். ஆர். எம். ஜெயச்சந்திரன் அடிகளார் மேற்கொண்டுள்ளார்.


### வரி விளம்பரம்

**அறிவித்தல்**

கொழும்புக்கு வரும் பிரயாணிகள் தங்க இடவசதி வழங்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்: ராமன், 27, ராமகிருஷ்ண வீதி, வெள்ளவத்தை. போன்: 587909

**விற்பனைக்கு**

வசாவிளான் உத்தரிமாதா கோவிலடி அருகாமையுள்ள 3½ பரப்பு காணி வீடு கிணறு தண்ணீர் தாங்கி பூட்டப்பட்டுள்ளது. இவையாவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி Mrs. லக்மன் 5/4, பிறஸ் லேன் யாழ்ப்பாணம்.

செல்வா ரவல்ஸ் அன் ருரீஸ் லிமிடெட் கொழும்பு. சகல நாடுகளுக்கும் துரித சேவை விபரங்களுக்கு: சிவபாதம் ''சுவுதி அகம்'' குரும்பசிட்டி அல்லது இ. குகன் மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை.

NORTH CEYLON
**Private Medical College**

Application forms for admission to the North Ceylon Private Medical College may be obtained from the Secretary, 106, Main Street, Jaffna (Tel. 23251 Jaffna).

Minimum qualifications are the same as those prescribed by the University Grants Commission for admissions to Universities in Sri Lanka.

The closing date for applications will be 31st. July 1985.

**North Ceylon Private Medical College**
**TEACHING POSTS**

Applications are invited from suitably qualified persons for full-time posts of Heads of Departments, Lecturers and Demonstrators in Anatomy, Physiology and Biochemistry.

Terms and hours of work - negotiable
Please apply to the Secretary, 106, Main Street, Jaffna.

**A/L 87**
சனி, ஞாயிறு வகுப்பு
7-15 : பிரயோககணிதம்
8-30 : தூயகணிதம்
ஆரம்பம் : 14-7-85
RAVIMOHAN
JAFFNA
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்

**A/L 87** விஞ்ஞான பாடங்கள்
பிரிவு I- 9.30—1.30 நடைபெறுகின்றது:
பிரிவு II- 11.30—3.30
ஆரம்பம் 07-07-85 ஞாயிறு
பிரதிகட்டு:
**New Master Institute**
B.M.C Lane, JAFFNA

**தேவை!**
**சோடா அடைக்கும் இயந்திரம்**
Carbon-di-oxide வாயுவைக் கலந்து, பானங்களைப் போத்தலில் அடைக்கும் இயந்திரம் (பழையதாயினும்) தேவை. தொடர்பு கொள்ளவும்.
விளம்பரதாரர் M 14, மே/பா dyn ads, 476, பிரதான வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**
**உருக்கு வட்டங்கள்**
ஐந்தே முக்கால் அங்குல விட்டமும் ஏழுநூல் கனமும் உள்ள உருக்கு வட்டங்கள் (mild steel discs) விற்பனைக்கு உள்ளன.
விளம்பரதாரர் M 15, மே/பா dyn ads, 476, பிரதான வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

**SCIENCE CENTRE**
CHAVAKACHCHERI
வகுப்பு: G.C.E (A/L) 1987
விஞ்ஞானம்
ஆரம்பம்: 06-07-1985 சனிக்கிழமை
காலை 9.00 மணி
நிர்வாகி

உதய சிந்தனை

பிரிந்து செல்வதற்கான சுதந்திரம் இல்லாமல் ஏற்படும் ஒன்றிணைப்பைச் சுதந்திரமானது என்று சொல்லமுடியாது.

--லெனின்

87, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

5-7-1985 வெள்ளிக்கிழமை (குரோதன ஆனி 21)

# கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளுக்கு மட்டும்

தவருன செய்திகளையும், பொய்யான தகவல்களையும், உண்மைகளைத் திரிபுபடுத்தியும் 'பரபரப்பான செய்தி'களைக் கொடுப்பதில் அண்மைக்காலத்தில் முன்னணியில் இடம்பெற்று வரும் 'லங்கா புவத்'தின் திருவிளையாடல்கள் பற்றி நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குமுன் இங்கு குறிப்பிட்டிருந்தோம்.

அதனை எழுதி இருபத்துநான்கு மணித்தியாலங்களில் 'லங்கா புவத்' நடத்திய மற்றொரு 'அண்டப்புழுகுச்' செய்தி உடனடியாகவே அம்பலத்துக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டது.

'வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்த கதை போல' பூட்டான் மகாநாட்டில் அனைவரையும் கலந்து கொள்ளச் செய்வதற்கு பாரத அரசு நல்லெண்ண முயற்சியை மேற்கொண்டு வரும் இவ்வேளையில், அதனைத் தவிடுபொடியாக்குவதற்கு 'லங்கா புவத்' முயற்சி எடுக்கின்றதா என்ற சந்தேகம் கூட ஏற்படுகின்றது.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 'லங்கா புவத்' என்ற தேசிய செய்தி ஸ்தாபனம், எவ்வாறு அப்பட்டமான பொய்ச் செய்திகளை, நம்பத் தகுந்தவையாக வெளியிடமுடியும்?

**அப்படியானுல் இதன் பின்னணியில் அரசாங்கமும் பங்கு வகிக்கின்றதா?**

பூட்டான் செல்லவிருக்கும் இளைஞர் பிரதிநிதிகள் மனதை மாற்றி அவர்களைப் பகிஷ்கரிக்கச் செய்து, அதன்மூலம் பூட்டான் மாநாட்டின் தோல்வியை முழுக்கமுழுக்க அவர்கள் தலைமேல் போடுவதற்காக திரைமறைவில் நடத்தப்படும் சூழ்ச்சியா இது?

நேற்றுமுன்தினம் தீவிரவாத இளைஞர் இயக்கங்களுக்கு எச்சரிக்கையும், காலக்கெடுவும் வழங்கியிருப்பதாக 'லங்கா புவத்' வெளியிட்ட செய்தியையே இங்கு குறிப்பிடுகின்றோம்.

தீவிரவாதிகள் வன்செயல்களைக் கைவிடத்தவறினால், தமிழ்நாட்டிலுள்ள அவர்களது முகாம்கள் ஆறு மணித்தியாலங்களில் அங்கிருந்து அகற்றப்படும் என்று இந்திய அரசு எச்சரித்துள்ளதாக 'லங்கா புவத்' செய்தி தெரிவித்துள்ளது.

போர் நிறுத்தம் ஏற்பட்ட பின்னரும் தீவிரவாதிகள் வன்முறைகளில் ஈடுபட்டு வருவதாக இலங்கை அரசு புகார் செய்ததைத் தொடர்ந்தே இந்தியா இந்த எச்சரிக்கையை விடுத்ததாகவும், இந்தச் செய்திக்கு மேலும் 'சுதி' சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தச் செய்தியை இலங்கை வானொலியும், ரூபவாஹினியும் தங்கள் மும்மொழிச் செய்திச் சேவையிலும் தாராளமாக விளாசித்தள்ளின.

இந்தச் செய்தியில் ஏதாவது உண்மையிருக்குமா என்பதைக்கொஞ்சம் கூட ஆராய்ந்து பார்க்காமல், அப்பட்டமானபொய் வதந்தியை, 'லங்கா புவத்'தை மேற்கோள்காட்டி அறிவித்து "வேலிக்கு ஓணான் சாட்சி' என்பதை அவை நிரூபித்துவிட்டன.

செய்தி வெளியான சிலமணி நேரங்களுக்குள் இதனை முற்ருக மறுத்துள்ளார் இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸித்.

''அரசாங்கத்துக்கும் கூட்டணி மற்றும் தீவிரவாத இயக்கத் தலைவர்களுக்குமிடையே இணக்கத்தை ஏற்படுத்தி, பூட்டான் பேச்சுவார்த்தையை வெற்றிகரமாக்கவே இந்தியா முயன்று வருகின்றது.

இவ்வாருன நேரத்தில் எச்சரிக்கை என்பதற்கும் காலக்கெடு என்பதற்கும் இடமேயில்லை'' என்று டிக்ஸித் அழுத்தம் திருத்தமாக கூறியுள்ளார்.

'லங்கா புவத்'தின் பச்சைப் பொய்யை சுடச்சுட அறிவித்த அரசாங்கத்தின் ஊதுகுழல்கள், டிக்ஸித் உடனடியாகவே வெளியிட்ட மறுப்பை அறியாதவர்கள் போல மௌன விரதம் அனுஷ்டித்து வருகின்றன.

மொத்தத்தில் பார்க்கப்போனுல், இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் நடைபெறும் சரித்திரப் பிரசித்தி பெற்ற பூட்டான் மகாநாட்டின் வெற்றிக்காக சகல பத்திரிகைகளும் தம்மாலான முழுப் பங்களிப்பையும் செய்துவரும் இவ்வேளையில், அதனை முறியடிப்பதில் அரசாங்க வெகுஜனத் தொடர்புச் சாதனங்களே முன்நின்று உழைக்கின்றன போலத் தெரிகின்றது.

'கெட்டிக்காரன் புளுகும் எட்டு நாட்களுக்கு' என்பார்கள்.

இதனை உணர்ந்தாவது தனது சாதனங்களை அரசு கண்காணிப்பது நல்லது!

## தகவலுக்கு ஐந்து லட்சம் டாலர் சன்மானம்

# விமானக் கடத்தல்காரரை கடத்த அமெரிக்கா திட்டம்

(வாஷிங்டன்)

அமெரிக்க 'ட்ரான்ஸ் வேல்ட் எயர் லைன்ஸ்' விமான பெய்ரூட்டில் கடத்தி அதில் பயணம் செய்த அமெரிக்கர் களை பணயமாக வைத்திருந்த இரு ஷியைட் முஸ்லீம் தீவிர வாதிகளையும் கைது செய்வதற்கு வேண்டிய தகவல்களைத் தருபவர்களுக்கு ஐந்து இலட்சம் அமெரிக்க டாலர்கள் சன்மானமாகத் தரப்படும் என்று வாஷிங்டனில் நேற்று அறிவிக்கப்பட்டது.

இவ்விமானத்திலிருந்த அமெரிக்கர் ஒருவரைச் சுட்டுக் கொன்ற ஷியைட் முஸ்லீம் தீவிரவாதி அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவரைத் தேடிக் கண்டுபிடிக்கும் வேலைகளில் அமெரிக்க புலனாய்வுத்துறை ஏற்கனவே இறங்கியுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது

இவ் இரு முஸ்லீம் தீவிரவாதிகளும் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில், இருவரும் ரகசியமான முறையில் லெபனுனுக்கு வெளியே கடத்தி வரப்பட்டு நீதி விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று அமெரிக்கத் தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இக் கடத்தல்காரர்களைக் கைது செய்வதற்கோ விசாரணைக்கு உட்படுத்துவதற்கோ லெபனுன் அரசாங்கம் எவ்விதத்திலும் அமெரிக்காவிற்கு உதவி அளிக்காது என்பதாலேயே அமெரிக்க புலனாய்வுத்துறை கடத்தல்காரர்களை லெபனுனைவிட்டு கடத்திச் செல்வதற்குத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஆச்சார்யாபிஷேக மண்டலாபிஷேகம்

ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானத்தின் பிரதம குருவாக இருந்த அமரர் சிவஸ்ரீ சபாபதீஸ்வரக் குருக்களின் பேரனை சிவஸ்ரீ வி. ஈஸ்வரக் குருக்களின் ஆச்சார்யாபிஷேக மண்டலாபிஷேக வைபவம் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகலில் ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலுமிருந்து வரும் சிவாச்சாரியார்கள் ஆசியுரை வழங்குவர். நிகழ்ச்சியின் நிறைவாக, புதிய குருக்கள் அடியார்களுக்கு வீபூதிப் பிரசாதம் வழங்குவார். தேவஸ்தானத்தின் பிரதம குரு சிவஸ்ரீ ச. மங்களேஸ்வரக் குருக்களுடன் இணைந்து இதே தேவஸ்தானத்திலேயே இவர் கடமையாற்றுவார்.

## வைத்தீஸ்வரா இல்ல போட்டி

யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் மு. இராமலிங்கம் கலந்து கொள்வார். திருமதி மு. இராமலிங்கம் பரிசில்களை வழங்குவார்.

# யாழ். தபாலக சேவைகள் வழமைக்குதிரும்பியுள்ளன

(இருபாலை)

யாழ்ப்பாண நகரம் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பியதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் பிரதான தபால் நிலையமும் தனது வழமையான வேலைகளை ஆரம்பித்துள்ளது.

பல வாரங்களாக கராஜில் வைத்து பூட்டப்பட்டிருந்த தபால் சேவை 'வான்'கள் மீண்டும் தபால் பொதிகளை ஏற்றி இறக்கும் வேலைகளை நடத்தி வருகின்றன.

மாற்றம் செய்யப்பட்டிருந்த யாழ் பெரிய தபாலகத்தின் சகல கரும பீடங்களும் நேற்று முன்தினம் இரண்டாம் திகதி முதல் மீண்டும் கோட்டை வெளிப்பக்கமாகத் திறக்கப்பட்டுள்ளன.

சகல கதவுகளும் திறக்கப்பட்டு முன்னைய சேவைகளை நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது

## உப ஜனதிபதி புஷ் அறிவிப்பு

# இன்றைய சுதந்திரத்திற்கு பயங்கரவாதம் சவால்

(லண்டன்)

அமெரிக்க உப ஜனதிபதி ஜோர்ஜ் புஷ் தனது ஏழுநாள் ஐரோப்பிய விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

திரு. புஷ் தனது விஜயத்தின் கடைசிக் கட்டமாக லண்டனில் பிரிட்டிஷ் பிரதமர் மார்கிரட் தட்சரை சந்தித்து சுமார் மூன்று மணிநேரமாக உரையாடினுர்.

இப்பேச்சு வார்த்தைகளின் போது, சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிராக ஜனநாயக நாடுகளால் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள், விமானக் கடத்தல்களுக்கு எதிரான நடவடிக்கைகள், பெய்ரூட் விமான நிலையத்தைப் பாவிக்காது விடுதல் போன்ற விடயங்கள் முக்கியத்துவம் பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

பேச்சுவார்த்தைகளின் பின்னர் உப ஜனதிபதி புஷ் கருத்துத் தெரிவிக்கையில், சுதந்திர ஜனநாயக நாடுகளுக்கு பயமுறுத்தலாக இன்று பயங்கரவாதம் இருக்கிறது என்று கூறினுர். இப்பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் அமெரிக்காவும் பிரிட்டனும் இணைந்து செயற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# கொர்பசெவ் பிரான்ஸுக்கு அக்டோபர் 2-ல் பயணம்

(பாரிஸ்)

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் மிகாயில் கொர்பசெவ் எதிர்வரும் அக்டோபர் மாதம் இரண்டாம் திகதி பிரான்ஸிற்கு உத்தியோக பூர்வமான விஜயமொன்றை மேற்கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குலக நாடொன்றிற்கு கொர்பசெவ் மேற்கொள்ளும் முதலாவது விஜயம் இதுவாகும். சோவியத் வெளிவிவகார அமைச்சராக இருந்த அந்ரே குரோமிக்கோ ஜனதிபதியாக நியமிக்கப்பட்ட பின்னர், கொர்பசெவின் பிரான்ஸ் விஜயமும், அமெரிக்க ஜனதிபதியுடனுன சந்திப்பும் அறிவிக்கப்பட்டிருப்பது சோவியத்தின் போக்கில் ஏற்படும் புதிய ஒரு திருப்பம் என்றே கூறப்படுகிறது.

பிரான்ஸ் ஜனதிபதி மித்தரோனின் அழைப்பையேற்றே கொர்பசெவ் அங்கு விஜயம் செய்யவிருப்பதாகவும், அமெரிக்காவிற்கும் - சோவியத்திற்கும் இடைப்பட்ட நிலையில் ஓரளவு நடுநிலை நாடாக பிரான்ஸ் இருப்பதால் கொர்பசெவ்- றீகன் உச்சி மகாநாட்டிற்கு இவ்விஜயம் ஒரு முன்னேடியாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## பங்களாதேஷில் புதிய அமைச்சரவை

(டாக்கா)

பங்களாதேஷில் ராணுவத் தலைவர் ஜெனரல் எச். எம். ஏர்ஷாட் பதினெரு பேர் கொண்ட புதிய அமைச்சரவை ஒன்றை நியமித்துள்ளார்.

பல கட்சிகளையும் சேர்ந்தவர்களைக் கொண்ட இவ் அமைச்சரவையில் மூன்று பேர் எதிர்க்கட்சியினராகும். மீதி எட்டுப் பேரும் ஜனதிபதி எர்ஷாட்டினுல் உருவாக்கப்பட்ட ஜனதா கட்சியைச் சார்ந்தவர்கள்.

## சீனப்புரட்சி மதகுரு விடுதலை

(பீக்கிங்)

சீனுவில் அரசு எதிர்ப்புப் புரட்சியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஆயுள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட 84 வயதுடைய மாநில ரோமன் கத்தோலிக்க மதகுருவை விடுதலை செய்ய வேண்டும் என்று சீன நீதிமன்றமொன்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

1955ல் கைது செய்யப்பட்ட இம்மதகுரு ஐந்து ஆண்டுகளின் பின்னர் 1960 ல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். இவருக்கு எதிராகக் கூறப்பட்ட குற்றச்சாட்டிற்காக இவருக்கு ஆயுட்கால சிறைத் தண்டனை அப்போது வழங்கப்பட்டது.

## கும்பாபிஷேகம்

அரியாலை பிரப்பங்குளம் அருள்மிகு ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய கும்பாபிஷேக தின சங்காபிஷேகமும், குருவிழாவும், வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது காலை 7-15 க்குச் சங்காபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகி, பகல் 11-00 மணிக்கு அபிஷேகமும், தீப ஆராதனையும் மாலை 4-30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையுடன் அம்பாள் வெளி வீதி வலம் வருதலும் இடம் பெறும்.

ஈழமுரசு

## இரத்த வங்கித் தரகர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்

(இருபாலை)

யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் இயங்கி வந்த இரத்தத் தரகர்கள் இருவர் இளைஞர் குழு ஒன்றினால் நேற்றுக்காலை வசமாக மடக்கிப் பிடிக்கப்பட்டார்கள். பிடிபட்ட இரண்டு தரகர்களும் உடனேயே ஆஸ்பத்திரியிலுள்ள இரத்த வங்கிக்கு இளைஞர்களால் கொண்டு செல்லப்பட்டு அவர்களில் ஒருவரிடம் இருந்து ஒரு பைந்து இரத்தம் எடுக்கப்பட்டு இரத்த வங்கிக்கு ஒப்படைக்கப்பட்டது மற்றவர் சுகவீனமுற்றிருந்ததால் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். இச்சம்பவத்தையறிந்து வேறு பல 'இரத்தத் தரகர்கள்' தலைமறைவாகி விட்டனராம்.

சட்டவைத்திய அதிகாரி கொழும்பில் :

# வேலைக்காரச் சிறுவன் சடலத்தைப் பரிசோதனை செய்ய டாக்டர்கள் இல்லை!

சில இளைஞர்களால் நேற்று முன் தினம் யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட சிறுவனின் சடலத்தை பிரேத பரிசோதனை செய்வதற்கு ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பிறவுண்வீதியில் உள்ள டாக்டர் ஒருவரின் வீட்டில் வேலைக்காரனாக இருந்த ரவி எனப்படும். பன்னிரண்டு வயதுச் சிறுவனே மரணமடைய நேர்ந்தது. இவரது சடலத்தை சில இளைஞர்கள் ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றும் பேராசிரியர் சரவணபவானந்தன் கொழும்பு சென்றுள்ளார். அவருக்குப் பதிலாகக் கடமையாற்றும் மற்றைய டாக்டர்கள் சிறுவனின் சடலத்தைப் பிரேத பரிசோதனை செய்ய மறுத்துள்ளனர்.

இதனால் தெல்லிப்பளை மாவட்ட வைத்திய அதிகாரியை அழைத்து பிரேத பரிசோதனை நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## இன்றைய நிகழ்ச்சிகள்

ஆவரங்கால் மத்திய பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறுகின்றது. கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். சி. எஸ். சிதம்பரநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

※

(சித்தன்கேணி)

தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி வித்தியாலய அதிபர் திரு. அம்பலவாணர் தலைமையில் இன்று நடைபெறும்.

※

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டை கிழக்கு சுகாதார அபிவிருத்திச் சபையினரால் சித்தன்கேணி கலைநகரில் ஆரம்ப சுகாதார நிலையம் இன்று காலை திறந்து வைக்கப்படவுள்ளது.

### டில்லியில்....

–1ஆம் பக்கத் தொடர்

அத்துலத் முதலியும் இலங்கை அரசின் வெகுஜனத் தொடர்பு சாதனங்களும் தமிழ் இளைஞர்களுக்கு எதிராக ஆத்திரமூட்டும்படியாக வெளியிடும் அறிக்கைகளை கூட்டணி அங்கீகரிக்கவில்லை எனவும் கூறப்பட்டுள்ளது.

பூட்டான் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் இலங்கை அரசின் பிரதிநிதிகள் குழுவில், அரசியல் முடிவுகளை எடுக்கமுடியாத சட்டத்தரணிகளும், அரச ஊழியரும் மட்டும் கலந்து கொள்வதாகவும், சிங்கள மக்களுக்கு வழங்கிய ஆயுதங்களை இலங்கை அரசு திருப்பிப் பெறவில்லை எனவும், இச் சிங்கள மக்கள் தொடர்ந்தும் தமிழ் மக்களைத் துன்புறுத்திவருவதாகவும் இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பூட்டான் மகாநாட்....

—1ஆம் பக்கத் தொடர்

பட்டிருந்தது.

அதனையடுத்தே இலங்கை அரசுக்கு இவ்விவகாரம் அறிவிக்கப்பட்டது. அதேவேளையில் பேச்சுவார்த்தை ஆவணங்களையும் தமிழர் பிரதிநிதிகள் தமிழில் கேட்கலாமெனவும் எதிர்பார்க்கப்படுவதால் அதற்கான ஒழுங்குகளையும் இலங்கை அரசு செய்துவருகின்றது.

### 12 பேர் குழு—

எஸ். எல். குணசேகரா, ஜி. வி. பி. சமரசிங்க, பேர்னாட் திலகரத்தின, பி. மகேந்திரன், திஸ்ஸ ஜெயக்கொடி, ஏ. ஸி. மரிக்கார், என். செனிவரத்தின, பீலிக்ஸ் டயஸ் அபேசிங்கா, ரி. பி. விஜேசிங்க ஆகியோரே தூதுக்குழுவில் இடம் பெறுபவர்கள்.

சில பத்திரிகைகள் முன்னர் அறிவித்திருந்தது போல வீடமைப்பு நிர்மாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திரு. ஆர். பாஸ்கரலிங்கம் தூதுக்குழுவில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ். 'இன்ரசிற்றி' ரயில் சேவை நேர மாற்றம்

கொழும்பு — காங்கேசன்துறை இன்ரசிற்றி ரயில் சேவையில் புதிய நேர மாற்றம் அறிவிக்கப்பட்டுள்ளது.

திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் காலை 5-45க்கு கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் இன்ரசிற்றி ரயில் 11-55க்கு யாழ்ப்பாணத்தில் தரித்து 12-20க்கு காங்கேசன்துறை சென்றடையும்.

திங்கள், புதன்கிழமைகளில் மீண்டும் பிற்பகல் 2-15க்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு 2-35க்கு யாழ்ப்பாணத்தில்தரித்து இரவு 8-50க்கு இன்ரசிற்றி கொழும்பு வரும்.

வெள்ளிக்கிழமைகளில் காங்கேசன்துறைவரும் இன்ரசிற்றி மீண்டும் ஞாயிறு பகல் 2-15க்கு அங்கிருந்து புறப்படும்.

### மானிப்பாய்....

பேரில் கைது செய்யப்பட்ட நூற்று எழுபத்துநான்கு தமிழ் இளைஞர்களில் ஒருவருக்கு நான்கு மாத கடூழிய சிறைத் தண்டனையும், 60 லட்சம் லியர் அபராதமும்விதிக்கப்பட்டதாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இளைஞர் மானிப்பாய் சேர்ந்த மார்க்கண்டு கணேசலிங்கம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வயோதிபரும்....

வந்தடைந்தது.

ஊர்வலத்தில் வயோதிபர்கள், பெண்கள், தாய்மார் உட்படபெருமளவுமானவர்களும் பங்கேற்றார்கள்.

### அவுஸ்திரேலியா....

தெரிவித்த தூதுவர் அவர்கள் வில் 224 பேருக்கு மனிதாபிமான முறையில் வழங்கப்பட்டதாகவும் சொன்னார்.

### தமிழ் தலைவருக்கும்....

அறிவித்துள்ளது.

'இந்தியன் எக்ஸ்பிறஸ்' பத்திரிகை, யுத்த நிறுத்தத்தை தொடர்ந்து, இந்தியா விரும்பினால் தீவிரவாதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும் என்ற செய்தி வெளியிட்டதாகவும், "ஸ்ரேற்ஸ்மன்' பத்திரிகையில் வன்செயல்களை முடிவுக்கு கொண்டு வராவிட்டால் அங்குள்ள தீவிரவாதிகள் முகாம்களை அடுத்த மாதம் மூடும்படி இந்திய அரசு கூறியதாகவும் இந்தியாவில் உள்ள தமிழ்த் தலைவர்களுக்கு இந்திய அரசு விடுத்த எச்சரிக்கையினால் தான் வடக்கு கிழக்கு பகுதிகளில் அமைதி நிலவுவதாகவும் லங்கா புவத் மேலும் தெரிவிக்கிறது.

### பேச்சினை எதிர்த்து....

பாடசாலை, தொழிற்சாலைகள், அலுவலகங்கள் ஆகியவற்றை பகிஷ்கரிக்கும்படியும், ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தும்படியும் வேண்டப்பட்டுள்ளது.

விடுதலை இயக்கங்களை 83 ஜூலை இனக்கலவரம், திருமலை, மடடுநகர், மன்னார், பகுதிகளில் அகதிகளாக்கப்பட்ட பல ஆயிரம் தமிழர்கள், வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி பகுதிகளில் நடந்த சம்பவங்கள்' உடமைகள் நாசம், பெண்கள் கற்பழிப்பு, தமிழ் மாணவர்களின் கல்விச் சீர்குலைவு ஆகியன நினைவுக்கு வரவில்லையா? இரத்த வெள்ளம் காயமுன்பு பேச்சு வார்த்தையா?

## மரண அறிவித்தல்

### சட்டத்தரணி க. வைரவநாதன்

இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபரும், பிரபல சட்டத்தரணியும், சமாதான நீதவானும், முன்னாள் குப்பிழான் கிராமோதய சபை, கிராம முன்னேற்றச் சங்கம், சனசமூக நிலையம், கோப்பாய் தெற்கு பிரஜைகள் குழு ஆகியவற்றின் தலைவரும், மல்லாகம் சட்டத்தரணிகள் சபைச் செயலாளரும் ஆகிய கந்தையா வைரவநாதன் சிவபதம் அடைந்துள்ளார்.

இவர் காலஞ்சென்ற குப்பிழான் கந்தையா தம்பதிகளின் புதல்வரும், கட்டைப்பிராய் காலஞ்சென்ற பொ. நடராசா (அதிபர்) தம்பதிகளின் மருமகனும் தனலட்சுமியின் அன்புக் கணவரும், யாழ்/திருக்குடும்ப மட சங்கீத ஆசிரியை பிரேமாவதி, புனிதவதி (இலண்டன்), புஷ்பவதி (இலண்டன்), குகநாதன் (ஜேர்மனி) சற்குருநாதன், பாலமுருகநாதன் ஆகியோரின் அருமைத் தந்தையும். ஸ்ரீகந்தராசா (நீர்ப்பாசனத் திணைக்களம்) ஜெயச்சந்திரன் (இலண்டன்) குணசிங்கம் (ஓமான்) ஆகியோரின் அன்பு மாமனாரும், இளைப்பாறிய அதிபர் காங்கேசு, திருமதி தில்லைமுத்து சுப்பிரமணியம், காலஞ்சென்ற சபாரத்தினம் ஆகியோரின் சகோதரரும், சோபனா, அஜேஜனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 5-7-1985 பிற்பகல் 2-00 மணியளவில் கோப்பாய் தெற்கு, முருக வாசாவில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ள வேண்டப்படுகின்றனர்.

தகவல் கொடுப்பவர்: ந. ஸ்ரீகந்தராசா

## 31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர்

மார்க்கண்டு கனகசபை

O.B.E., M.V.O., M Inst T.

(இளைப்பாறிய புகையிரத மாஅதிபர்)



தோற்றம்: 10-6-1898

மறைவு: 5-6-1985

தங்கள் ஆத்மா சாந்தியடைய நன்றியுடன் பிரார்த்திக்கும்

அன்பு மனைவி, பிள்ளைகள், பேரப் பிள்ளைகள்

திருமதி G. பரராஜசிங்கம்
76A, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

## வவுனியாவாழ் பொதுமக்களின் உருக்கமான வேண்டுகோள்

வணபிதா. டாக்டர். D. J. கனகரத்தினம் அவர்களால் பாவிக்கப்பட்டு வந்த புத்தம் புதிய இளம் மண்நிற 40 SRI 687 இலக்கம் உடைய மிற்சுபிசி டெலிக்கா டீசல் வான் 12 06.85 அன்று இனம் தெரியாதவர்களினால் சில மணித்தியாலங்களில் திருப்பித் தருவதாக கூறப்பட்டு கடத்திச் செல்லப்பட்டது. ஆனால் இன்று வரை திருப்பி ஒப்படைக்கப்படவில்லை

58 வயது நிரம்பிய இப்பாதிரியார் தன்னைத் தேடிவந்த உயர் பதவிகளையும் உதறித் தள்ளிவிட்டு எல்லோரினாலும் கஷ்டமான பிரதேசமாகக் கணிக்கப்பட்ட வவுனிய'வில் இறுதி வரை தேவ ஊழியம் செய்ய வேண்டும் என்று உறுதி கொண்டு அதன்படியே நடந்தார். அவருடைய சேவை வவுனியாவிலுள்ள அகதிகளுக்கும், ஏழை மக்களுக்கும் கிட்டியது. கடந்த நான்கு வருடங்களாக வவுனியா காடுகளின் மத்தியில் உள்ள கிராம மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அயராது பாடுபட்ட எங்கள் வழிகாட்டியின் வாகனத்தை உடன் திருப்பி ஒப்படைக்கும்படி பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 5-7-85 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336